# மிரிண்டா குளிர்பானம் வாங்குபவர்கள் நடிகை அசினை சந்திக்க வாய்ப்பு

மதுரை,டிச.24

பெப்சிகோவின் ஆரஞ்சு குளிர்பான பாரண்ட்டான மிரிண்டா தமிழகத்தில் இதுவரை இல்லா அளவுக்கு மிக பிரமாண்டமான இயக்கத்தை தொடங்கி யுள்ளது.

இந்த இயக்கத்தின் ஒரு பகுதியாக கலாட்டா படை ஒன்று உங்கள் வீட்டிற்கு வரலாம். அவர்கள் வரும் நேரத்தில் உங்கள் வீட்டில் மிரிண்டா குளிர்பானம் இருந்தால் ரூ.5 ஆயிரம் மதிப்புள்ள தங்கக்காசு பரிசாக கிடைக்கும். நுகர்வோர் வெல்வதற்கு மொத்தம் 1000 தங்கக் காசுகள் உள்ளன. கலாட்டா படை வீட்டிற்கு வரும் போது மிரிண்டா பாட்டில் இல்லாதவர்களுக்கு 2 லிட்டர் மிரிண்டா ஆரஞ்சு பாட்டிலுக்கா தள்ளுபடி கூப்பன் வழங்கப்படும்.

மேலும் நுகர்வோர் களிடையே ஸ்லோகன் போட்டி நடத்தப்பட்டு முதல் 25 இடங்களில் பிடிப்பவர்களுக்கு அசினை சந்திக்கும் வாய்ப்பு அளிக்கப்படும். பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நடத்தப்படும். வரும் ஜனவரி 17 -ம் தேதி வரை இப்போட்டியில் மதுரை, சென்னை, சேலம், கோவை, திருச்சி, திருநெல்வேலி, புதுச்சேரி ஆகிய 7 நகரங்களை சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளலம் என்று பெப்சிகோ நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் மார்க்கெட்டிங் பிளேவர்ஸ் அல்பனா டைட்டஸ் தெரிவித்துள்ளார்.